DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

SINGAMPUNARI

C.C. No. 398 /2019 PW .7

பெயர் : கீதஞ்சலி	தந்தை/கணவர் பெயர்:
ஊர் :	தாலுகா :
வயது :	தொழில் : மருத்துவர்
ஜாதி :	சமயம் : இந்து

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026

(1ம் எதிரி இறப்பு. 2மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. 2மற்றும் 3 எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

11.02.2026 முதல் விசாரணை:

1.நான் தற்போது சிவகங்கை மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.03.2019 ம் தேதி திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது ருக்குமணி 52 வயது பெண்மணி, தெரிந்த ஆண் நபர் மற்றும் 2 பெண் நபர்களால் மாலை 04.00 மணியளவில் ஆலம்பட்டி அருகே செங்காலால் தாக்கப்பட்டதாக சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதித்த போது அவருக்கு இடது காதுக்கு பின்புறம் 5x1x1 cm அளவில் கிழிந்த காயம் ஏற்பட்டிருந்தது . அவரை மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதித்து சிசிக்சையளித்து விட்டு 28.03.2019 ம் தேதி சிகிச்சை முடித்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதரண காயம் என்று விபத்து பதிவேட்டு நகலில் கருத்துரை வழங்கினேன். **(அந்த விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

2.மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் நிலை தடுமாறி பின்னால் விழும் போது கல் போன்ற பொருட்கள் குத்தி ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் உள்ளது.